**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: STC.1501/2022**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : மகாலிங்கம் | Caste | : |
| Father 's Name / Husband Name | : வேலுத்தேவர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(புகார்தாரர் ஆஜர். புகார்தாரர் மற்றும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் ஆஜராவதிலிருந்து விலக்களிக்கப்பட்டது.)
**(05.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் திருமங்கலம் அசோக்நகர் 4 வது தெருவில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். இன்று அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. நான் கிரையம் பெற்ற இடத்தில் வீடு கட்டி குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன்.என் வீட்டுக்கு தென்புறம் எதிரிகள் கனியம்மாள் பாஸ்கரன் வீடு உள்ளது. அவர்கள் வீடு கட்டும் போதுஎன் இடத்தை ஆக்கிரமித்து வீடு கட்டி விட்டார்கள்.அதுசம்பந்தமாக எங்களுக்குள் அடிக்கடி பிரச்சினை இருந்து வந்தது. அதுசமயமாக எனது மனைவி 13.07.2020ம் அன்று திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் எனது மனைவி மேற்படி எதிரிகள் கனியம்மாள், பாஸ்கரன் மீது புகார் கொடுத்தார். காவல் நிலையத்தில் இருதரப்பினரையும் அழைத்து நீங்கள் இருவரும் வருவாய்துறை மூலமாக அவர் அவர் இடத்தை அளந்து புலங்கிகொள்ள அறிவுறுத்தினார்கள். அவர்கள் சொன்னபடி வருவாய்துறை மூலமாக இருவரும் அளந்து பார்க்கும் போது மேற்படி எதிரிகள் எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்தது தெரியவந்தது. அது சமயமாக பொது சமரசமாக பேசும்

போது மேற்படி எதிரிகள் ஆக்கிரமிப்பு செய்த இடத்தை அகற்றி கொள்வதாகவும் இனிமேல் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யமாட்டோம் என்றும் ஒரு ஒப்பந்தம் பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள். அந்த ஒப்பந்தமானது 04.09.2020 அன்று எழுதிக்கொடுக்கப்பட்டது. எழுதிக்கொடுத்த பின்பும் மேற்படி எதிரிகள் தொடர்ந்து பிரச்சினை செய்தார்கள். 02.12.2020ம் அன்று சுமார் 9 காலை மணியளவில் நானும் எனது மனைவியும் என் வீட்டிற்குள் இருக்கும் போது கனியம்மாள், அவரது கணவர் பாஸ்கரன், தந்தை தங்கராஜ் ஆகியோர்கள் நான் வேலி போட்டிருந்த எனது இடத்திற்குள் நுழைந்து வேலியை அகற்ற முயற்சி செய்தார்கள். நானும் எனது மனைவியும் சத்தம் கேட்டு வெளியே பார்த்த போது மேற்படி எதிரிகள் வேலியை அகற்ற முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். அதனை பார்த்து நான் ஏன் இவ்வாறு இங்கு பிரச்சினை செய்கிறிர்கள் என்று கேட்ட போது 3 பேரும் என்னிடம் எவ்வளவு துணிச்சல் இருந்தால் என்னிடம் பத்திரம் போட்டு வாங்குவாய் என்று அன்றிலிருந்தே உன் மீது கொலை வெறியில் இருக்கிறோம் என்று சொல்லி தேவிடியா மகனே என்று அசிங்கமாக பேசி கனியம்மாள் கையில் வைத்திருந்த வீடு கட்டும் கம்பியாலும், பாஸ்கரன் கையில் உருட்டு கம்பாலும், தங்கராஜ் கையில் உருட்டு கம்பாலும் எங்களை அடிக்க ஓடிவந்தார்கள். நாங்கள் பயந்து போய் வீட்டிற்குள் ஓடவும் எதிரிகள் அனைவரும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று ஓடி வந்தார்கள். நான் பயந்து போய் வீட்டிற்குள் சென்று கதவை பூட்டிக் கொண்டோம். நீ எப்படி வீட்டை விட்டு வெளியே வருவாய் என்று சொல்லிக் கொண்டு இருந்தார்கள். நான் அலறி சத்தம் போடவும் அருகில் வேலை செய்து கொண்டிருந்த போது அழகுராஜா, பால்சாமி இருவரும் ஓடி வந்து எதிரிகளை சத்தம் போட்டு அனுப்பி வைத்தார்கள். பின்பு எங்களை வெளியே வரவைத்து காவல் நிலையத்தில் புகாராக கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதன் அடிப்படையில் நானும் எனது மனைவியும் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலிசாரும் விசாரிக்கிறோம் என்று சொல்லிவிட்டு பலமுறை அளைக்கழித்தார்கள். மேலும அவர்கள் சமரசமாக போகுமாறு அறிவுறுத்தினார்கள். நான் மனம் உடைந்து போனேன். அந்த புகாரின் அடிப்படையில் நான் மனுவாக இந்த நீதிமன்றத்தில் சமர்பிக்கிறேன்.